1983 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 238, 239 240 241 ஆகியவை மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறு கின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் சிமெண்ட் விலை 100 ரூபாய்க்கு மேலே போய் இருக்கின்றது. அது குறித்து 54-வது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் வராது. இன்றைக்கு அரிசியே கிடைக்கவில்லை, சிமெண்ட் இல்லை என்றால் 10 நாட்கள் கழித்துக் கூட கட்டிடத்தைக் கட்டிக் கொள்ளலாம்.

(முற்பகல் 10·20)

திரு இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் ஒரு ஆலயத்தில் ஒரு காவலர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் அது குறித்து.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறைப்படி கொடுத்திருந்தால் வரும்.

4 உரிமைப் பிரச்சினை

ஆளுநர் உரை மூலம் பேரவைக்கு தவறான தகவல் அளிக்க முயற்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 9—2—1983 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பேரவையில் 246-ம் விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு அதற்கான விளக்கமும் அளித்தார். மாண்புமிகு பேரவை முன்னவர் விளக்கம் அளித்தபின், எனது தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும் என்று நான் கூறியிருந்தேன்.

[பேரவைத் தலைவர்] [1983 பிப்ரவரி 11

24—1—1983 அன்று மேதகு ஆளுநர் உரையில் ''தமிழகத்தில் நிலவும் வறட்சி குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை ஒன்று அனுப்பி விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் 27-1-1983 அன்று தான் எழுப்பிய ஒரு ஒழுங்குப் பிரச்சனைக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அளித்த குறிப்புரையில் ''இந்த அரசு 24—1—1983 அன்றுதான் அரசு அதிகாரி மூலம் அனுப்பப் பட்டது'' என்று கூறினார் என்றும், எனவே இதில் முரண்பாடு இருப்பதால், ஆளுநர் உரைமூலம் தவறான தகவலை இப் பேரவைக்குத்தர அரசு முயன்றிருப்பது அவை உரிமை மீறிய செயலாகும் என்று திரு. துரைமுருகன் குறிப்பிட்டார்.

பல்வேறு துறைகளின் மூலம் எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கைகளுக்காக ரூ. 190 கோடி நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டு அரசுக்குத் தேவையான நிதியின் அளவை முன்கூட்டியே மத்திய அரசுக்குத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, தொகையின் அளவு குறித்தும், விரிவான அறிக்கை, 'மெமோராண்டம்' அனுப்பப்படும் என்றும் மத்திய அரசு விவசாயத் துறை கூடுதல் செயலாளருக்கும், மத்திய அரசு நிதித் துறை இணைச் செயலா ளருக்கும் 13—1—1983 அன்று டெலக்ஸ் மூலம் தெரிவிக்கப் பட்டது என்றும், மாவட்ட ரீதியான பயிரிடப்படாத நிலங்கள் பரப்பு, விளைச்சலின் விளைவுகள், பாதிப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் தொகை இவை கொண்ட அறிக்கையும் அட்டவணையும் 24—1—1983 அன்று அதிகாரி மூலம் நேரடியாகக் கொடுக்கப் பட்டது என்றும், எனவே, ஆளுநர் உரையில் எந்தவிதத் தவறான தகவலும் கொடுக்கப்படவில்லை என்றும் மாண்புமிகு பேரவை முன்னவர் விளக்கினார்.

முதல் அறிக்கை 13—1—1983அன்று டெலக்ஸ் மூலம் தெரிவிக் கப்பட்டது என்றும், விரிவான பல விவரங்கள் அடங்கிய இரண்டா வது அறிக்கை 24—1—1983 அன்று அதிகாரிமூலம் நேரடியாகக் கொடுக்கப்பட்டது என்றும், மேலும் ஆளுநர் உரையில் குறிப்பிட் டிருப்பது மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது என்று தானே ஒழிய மெமோராண்டம் அனுப்பப்பட்டது என்று குறிப் பிடப்படவில்லை என்றும் பேரவை முன்னவர் கூறியுள்ள விளக் கத்திற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பில் மேலெழுந்தவாரியாகக் கூட அவை உரிமை மீறல் எழவில்லை என்ற காரணத்தால் இதனைப் பேரவையில் எழுப்ப இசைவு மறுக்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS